


இண்டோ–பிரிட்டிஷ் இனிஷியேட்டிவ் நிறுவனமும் சென்னையில் உள்ள இங்கிலாந்து துணைத்தூதரகமும் இணைந்து இந்தியா–இங்கிலாந்து இடையே நீரிழிவு நோய் குறித்த மாநாடு நேற்று தொடங்கியது. மாநாட்டில் கலந்து கொண்ட இங்கிலாந்து சுகாதாரத்துறை மந்திரி அன்னா சவுப்ரா, இந்திய சுகாதாரத் துறை கூடுதல் செயலாளர் கேசவ் தேசிராஜு, இங்கிலாந்து துணைத்தூதர் மைக் நித்தவ்ரியானாகிஸ், டாக்டர்கள் பிரித்வி மோகன்தாஸ், வி.மோகன், விஜய் விஸ்வநாதன் ஆகியோர்.

### தெற்கு ஆசியாவில்

# சென்னை நகரம் சுகாதாரத்துறையில் சிறந்து விளங்குகிறது

## இங்கிலாந்து மந்திரி அன்னா சவுப்ரா பாராட்டு

சென்னை,ஜன.19–

சென்னை நகரம் சுகாதாரத்துறையில் தெற்காசியாவின் கேந்திரமாக தலை சிறந்து விளங்குகிறது என்று இங்கிலாந்து சுகாதாரத்துறை மந்திரி அன்னா சவுப்ரா பாராட்டினார்.

### நீரிழிவு நோய் பற்றிய மாநாடு

இண்டோ–பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் என்ற நிறுவனமும், சென்னையில் உள்ள இங்கிலாந்து துணைத்தூதரகமும் சேர்ந்து சென்னை தாஜ் ஓட்டலில் இந்தியா–இங்கிலாந்து இடையேயான நீரிழிவு நோய் குறித்து மாநாடு நடைபெற்றது. மாநாட்டை இங்கிலாந்து சுகாதாரத்துறை மந்திரி அன்னா சவுப்ரா தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

### சென்னை நகரம் தலை சிறந்து விளங்குகிறது

சுகாதாரத்துறையில் சென்னை நகரம் தெற்கு ஆசியாவிலேயே கேந்திரமாக தலை சிறந்து விளங்குகிறது. நீரிழிவு நோய் ஒரு தீவிரமானதுதான். நாம் அதை உலக அளவில் ஆராய்ச்சி செய்துவருகிறோம். 2 நாடுகள் இது குறித்து பேசி ஆராய்ச்சி செய்வது நல்ல சந்தர்ப்பம். இந்த நோய்க்கு முக்கிய காரணம் உடல் பருமன்.

இங்கிலாந்து அரசு சுகாதாரத்துறையில் அதிக அக்கறை செலுத்தி வருகிறது. உடல் பருமனை குறைக்க பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

நீரிழிவு மட்டுமல்லாமல், புற்றுநோய், காசநோய், எச்.ஐ.வி. ஆகிய நோய்களை ஒழிப்பதிலும், தடுப்பதிலும் இங்கிலாந்து அரசு முனைப்புடன் செயல்படுகிறது. உலகம் முழுவதும் இந்த நோய்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இங்கிலாந்து மந்திரி அன்னா சவுப்ரா பேட்டி அளித்தார்.

இந்திய சுகாதாரத்துறை கூடுதல் செயலாளர் கேசவ் தேசிராஜு கூறியதாவது:–

### குறைந்த செலவில் தரமான சிகிச்சை

குறைந்த செலவில் எல்லோருக்கும் அனைத்து மருத்துவ வசதிகளும், தரமான சிகிச்சையும் கிடைக்கவேண்டும் என்ற உயர் நோக்கத்தில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், இருதய நோய், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு முதலிய தொற்றுநோய் அல்லாத நோய்களுக்கான சிகிச்சையில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

இதற்காக இந்தியாவும்–இங்கிலாந்தும் சேர்ந்து ஆராய்ச்சி பணிகளை செய்யும். இங்கிலாந்தில் உள்ள நீரிழிவு துறையில் பிரபலமான நிபுணர்கள் இந்தியாவிற்கு வந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். இந்தியாவில் இருந்தும் அவர்கள் விரும்பும் உதவிகள் செய்யப்படும். இந்த மாநாடு இரு நாடுகளுக்கிடையே நீரிழிவு உள்ளிட்ட சுகாதாரத் துறையில் மேம்பாடு அடைய உதவும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### டாக்டர் பிரித்வி மோகன்தாஸ்

இண்டோ–பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் கூறியதாவது:–

இங்கிலாந்தில் அரசு ஆஸ்பத்திரிகளிலேயே 80 சதவீத மக்கள் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால் இந்தியாவில் அது தலைகீழாக உள்ளது. அதாவது அரசு ஆஸ்பத்திரிகள் மீது நம்பிக்கை இல்லாமல் 80 சதவீதம் பேர் தனியார் மருத்துவமனைகளை நாடுகிறார்கள். இங்கிலாந்தில் அரசு மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படுகின்றன. அந்த நிலை இந்தியாவில் வரவேண்டும்.

இந்தியாவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் டாக்டர்களுக்கு அனைத்து நோய்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கவேண்டும். அவ்வாறு செய்தால் தான் கிராமப்புற மக்கள் அனைவரும் இப்போது பயன்படுத்துவதை விட அதிகமாக ஆரம்ப சுகாதார நிலையங்களை பயன்படுத்துவார்கள்.

இவ்வாறு டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் கூறினார்.

### டாக்டர்கள் மோகன், விஜய் விஸ்வநாதன்

மாநாட்டு அமைப்பு தலைவர் டாக்டர் வி.மோகன், இங்கிலாந்து துணைத்தூதர் மைக் நித்தவ்ரியானாகிஸ், மாநாட்டு அமைப்பு இணைதலைவர் டாக்டர் விஜய் விஸ்வநாதன் ஆகியோர் உடன் இருந்தனர்.